கடற்கரை கவியரங்கு - 607 நாள்:07-11-2021

## வான் மழையே வா!

கொட்டும் மழையழகோ குமிழும் நீரழகோ!
பட்டும் படாமல் முட்டும் நீர்த்திவலை;
கிட்டிய பொருள் தட்டித் தெறித்துவிழ,
பட்டதால் மனித உடல் குறுகுறுக்கும்!

வட்ட ஒலியழகாய் வளரும் நீக்குமிழி!
தொட்டுப் பார்க்க மனம் தூதுவிடும்!
கட்டாய் காகிதத்தில் கப்பல் செய்துவிட்ட;
கிட்டாத காலமது கிளர்ச்சி செய்ய,

எட்டநின்று மழைநீரின் ஓட்டத்தை,
எழுகின்ற கதிரோடு ஏங்கிப் பார்த்தேன்!
மேழிச் செல்வமென மேதினியில் வாழ்ந்த,
அழியா நினைவுகள் அளப்பரிய மனமாக,

எழிலார்ந்த இயற்கையதும் ஏச்சுக்கு ஆளாக,
எழுதிய வாழ்க்கையில் எண்ணிறந்த போராட்டம்!
தழுவாது இயற்கையோடு வாழ்ந்த மகன்,
தடுமாறி நிற்குமொரு காலமிது ஆக,

தான்செல்லும் வழியெல்லாம் தடுப்பணையாய்,
வான்முட்ட வீடுகட்டி வாழ்ந்திட்டால் என்செய்யும்?
தான் போக வழியின்றி தடுமாறித் தான்நிறையும்!
வான்மழையும் தன்கடமை எவன் செய்யும்?

கோட்டைக் கொத்தளமாய் உலகில்மன்னர் வாழ,
கோலமிகு கரிகாற்பெருவளத்தன் அணைசெய்தான்!
சீலமாய் நின்றஅறிவு சிதறிப் போனதெங்கே?
ஆலமாய் அறிவை நிரப்பி வாழ்வோம் நிறைந்தே!

கவிவளவன் ஆக்கிய கு.ப. அசோகன்
07-11-2021 (11.45 ஏ.எம்)